# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2383/08 - 2024 මැයි මස 06 වැනි සඳුදා - 2024.05.06

2383/08 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WAB/LND/09/03.

பொது மக்கள் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(பொது மக்கள் பணி என்ன என்பது: வந்துரம்ப சமுர்த்தி சமூக அடிப்படை வங்கியை நடாத்திச் செல்லல்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் வந்துரம்ப பிரதேச செயலாளர் பிரிவில் 190 ஆம் இலக்க பன்வில கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள துமான நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக் கப்பட்ட காணி அளவைப்பட இலக்கம் 810457 கொண்ட அடிப்படை வரைபடத்தில் விரிவாக காட்டும் கீழ் விபரிக்கப்படும் காணித்துண்டின் விபரங்கள்:

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: பன்வில கந்த இல்லையெனில் ஹெனகந்த தோட்டம்; விபரம்: வீட்டுத்தோட்டம், 2 நிரந்தரக் கட்டிடங்களும் ஒரு நீர்த் தாங்கியும் உள்ளது; விஸ்தீரணம்: 0.0479 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி மு.ப. 09.30 மணிக்கு வந்துரம்பே பிரதேச செயலாளர் அலுவல கத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிஹாரா மெலனி வெத்தசிங்ஹ,
பிரதேச செயலாளர்
வந்துரம்பே.

பிரதேச செயலகம்,
வந்துரம்பே,
2024, ஏப்பிறல் 29

EOG 05 - 0038

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.